ப்ரஹ்மவித்யா

[illegible]

ஸம்ஸ்க்ருதபாஷா

வைத்யகம்

[illegible]

[illegible]

ப்ரம்மவித்தியா

விகாரிஸு தைமீ 18உ

ஸம்ஸ்கிருதபாஷா

வைத்தியம்

தொடர்ச்சி

நமது வைதிகமான வைத்திய சம்பிரதாயத்தைப்பற்றிய சுலோகங்களாவன:—முதலில்வைத்தியரிலக்கணம். உபநயனம் செய்ததுமுதல் சுத்தனுகவேயிருந்து ஸூச்ருதாசாரியர் கூறிய விதானப்படி ஒஷதிஸூக்தத்தைகுருமுகமாய் கிரஹித்து 4 - வேதங்களிற் கூறியமந்திரங்களைநியமத்துடன்ஜபித்துநாடோறும்ஒளபாசனமனுஷ்டித்து க்ஷயம், அபஸ்மாரம், குஷ்டம், முதலிய ரோகங்களை நிவர்த்திக்கும்படி ஸித்திபெறவேண்டியது. அரசமரத்திலும் புரசமரத்திலும் ஒஷதிகளனைத்தும் வசிக்கின்றனவென்று சாஸ்திரங் கூறுதலால் அவ் விருக்ஷங்களைப் பிரதக்ஷண நமஸ்காராதிகளால் பூசிக்க வேண்டியது. ஆரோக்கிய ஸித்தியின் பொருட்டு ஆதித்திய [சுவரூபியான உத்தம வில்வ விருட்சத்தையும் பாலரோகநிவர்த்திக்காக துளசியையும் பூஜை முதலிய உபசாரங்களாலுபாசித்தல் வேண்டும். தன்வந்தரி கூறிய முறைப்படி ஆரோக்கிய சாலையொன்றுகட்டி அதில் ஆசுவலாயனர் கூறியவாறு தன்வந்தரி யாகம்செய்து விதி வழுவாது தனது நித்திய கருமங்களை முடித்துக்கொண்டு காலையில் ரோகிகளை நன்குபரீக்ஷித்து அவர்களிடத்தன்பு கூர்ந்துகொரேவார்த்தைசொல்லாது பொறுமையுடன் ரோகத்திற்கேற்றபடி சாஸ்திரஸித்தமான ஒஷதிகளைக்கொடுத்துத் தன் புத்திக்குத்தோன்றியபடி கண்டவாறுகொடாமல் ஜாக்கிரதையாய் சிகித்ஸை செய்யவேண்டியது. மாத்தியான்ஹானுஷ்டானத்தில் நியமத்துடன் தன்வந்தரியைப்பூசித்துப் பலியுங்கொடுக்கவேண்டும். ஆயுர்வேதத்திற் கண்டவாறு தன்வந்தரி மந்திரத்தை ஜபித்துப் புரச்சரணஞ்செய்து முறைப்படி சாதிந்தல்வேண்டும். ஒஷதிஸூக்தத்தையும் அகோராதி அஸ்திரத்தையும் விதிதவறாமல் அப்பியசித்து ரசேசுவரனை உமாபதியை ரசலிங்கம்முதலியவைகளில் பூசித்து அச்சிவநிர்மாலியத்தைச் சிரசிலணிந்து ரஸஸித்தமார்க்கத்தை முக்கியமாகக்கொண்டு ரசகந்தகாதி ஸித்தியைப் பெறல்வேண்டும். நான்கு விதமான சிகித்ஸையைக்

[illegible]

கற்றுணர்ந்த ஆசிரியரிடமிருந்து கசடற சிகித்ஸாக்கிரமங்களை அப்பியசித்து ரோகிகளின் ரோகத்திற்குத் தக்கவாறு காலதேசங்களை அனுசரித்து யந்திரம் ரஸம் கல்பம், நெய், தைலம், பஸ்மம், சிந்தூரம், சூரணம் லேபனம், இவைகளைக்கொண்டும் இரேசனம், சிரோரேகம், வஸ்தி, ரக்தவிமோக்ஷம், வமனம், ஸ்வேதனம் ஸ்நேஹபானம் முதலிய சோதன மார்க்கத்தையனுசரித்து அவைகளில் கைதேர்ந்தவனாய் அவரவர்கட்குரிய ஆகாராதிகளுக்கேற்றபடி மிக்க ஜாக்கிரதையாய் வைத்தியம் செய்ய வேண்டும். சிகித்஛ை செய்யும் பொழுதெல்லாம் தன்வந்தரி பகவானையும் அசுவினி தேவர்களையும் வைத்திய சிரேஷ்டனாகிய உமாபதியையும் தியானித்தே ஆரம்பிக்கவேண்டியது. ஒஷதி சித்தியின்பொருட்டு யஜுர்வேதத்தில் கூறியபடிதென்பாகத்தில் சாக்ஷியாக ஓர் பிராம்மணரையும் ஜலகும்பத்தையும் (அக்கினிபகவான் பத்து வைத்தியருக்கு சமமாகையால்) அக்கினியையும் வைத்துக்கொள்ளவேண்டும். அவ்வக்கினியில் தன்வந்தரி ஹோமஞ்செய்து மிருத்தியுஞ் சயமந்திரத்தையும் மிருத்தியுலாங்கலத்தையும் விஷத்தைப் போக்கக்கூடிய மந்திரங்களையும் ஜபித்தல்வேண்டும். பேய் பிசாசுகளோட்டுவதற்காக சில மந்திரங்களை ஜபித்துச் சித்தி பெறல்வேண்டும். மாதந்தோறும் அஷ்டமியிலாவது அயனத்திற்கொருமுறையாவது வருஷத்திற்கொருமுறையாவது மஹாமிருத்தியுஞ் சயவிதிப்படி ஹோமம் செய்யவேண்டியது. கருமவிபாகத்திற்குத் தக்கவாறு சாதாதபர்முதலிய மகரிஷிகள் கூறிய விதியை நன்கு விசாரித்துப்பிராயச்சித்தம் விதிக்கவேண்டியது. மந்திரசித்தி லோகசித்தி மணிசித்தி முதலியவைகளைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டும். ஆரோக்கியசாலைக்குச் சமீபத்தில் ஒஷதிகளைவைத்து எருமுதலியவைகளால் வளர்த்துச் சகல ஒஷதிகளையும் வீரியமுடையவைகளாகச் சாதித்துச் சாஸ்திரங்களை நன்றாய் அப்பியசித்து சிகித்ஸாசாதனங்களைச் சம்பாதித்து மகாமந்திரங்களை ஜபித்து பிராயச்சித்தங்களெல்லாவற்றிலும் சங்கரனை ஸ்மரித்து வைத்தியம் செய்யக்கடவன். வைத்தியம் செய்யும் முறையைப் பின்வருமாறு கூறுவாம். காலையிலெழுந்து ஸ்நானஞ்செய்து பரிசுத்தனாகி மிருத்தியுஞ் சயனான உமாபதியைத் தியானித்து மந்திரங்களை ஜபித்து ஓர் குடத்தில் நிறைய ஜலமெடுத்துக்கொண்டு சிறந்த ஒஷதிகளிருக்குமிடத்தை நோக்கிச் சென்று அவைகளைக்கண்டு அத்தீர்த்தத்தால் அபிஷேகஞ்செ

[illegible]

ய்து அந்தைச்சுற்றிலும் ஜலத்தைத் தெளித்து (யாஜா தா) என்ற மந்திரத்தை உச்சரித்து ஒஷதியைத் தொட்டு (ஊ॰ம்வநாமி) என்ற மந்திரத்தைச் சொல்லி ஜாக்கிரதையாயெடுத்து அகோர மந்திரத்தால் இரக்ஷித்து ஒருவரோடும் பேசாமல் திரும்பி வீட்டுக்குச் சென்று அதர்வண வேதத்திலும் யஜுஸ்ஸிலும் ருக் வேதத்திலும் சிலகாண்டத்திலுங் கூறிய வைத்தியத்தைப்பற்றிய மந்திரங்களால் இடித்துப்பொடி மந்திரங்களை ஜபித்து இரசங்களிற் சேர்க்க வேண்டியது. தீக்ஷை வைத்துக்கொண்டு நியமத்துடன் பெருமை பொருந்திய இரசங்களையும் சாதித்துக் தன்னுவியன்றவரைசாஸ்திர விஹிதமான ரசாயனத்திலும் பிரவர்த்திக்க வேண்டியது. வைதிகமாகிய இவ் வைத்திய முறைமையைச் சிஷ்யர்களுக்குமுபதேசிக்க வேண்டியது. இங்ஙனம் வேதத்திற் கூறிய மந்திரங்களால் ஏற்பட்ட வைத்திய முறை சிறிதிங்கு கூறப்பட்டதென்றறிக. இதன் விரிவு வைதிக வைத்தியசாசனமென்ற கிரந்தத்திற்கூறப்படும். இங்ஙனமிருக்க இப்பொழுது காலக் கொடுமையினால் வைத்திய சம்பிரதாயமும் எங்கும் சண்டாளனிடத்திற்கூட வியபசரிக்கின்றமையால் அதன்பயனும் அவ்விதமே. எக்காலம்வரை காசியபர்முதலிய விஷவைத்தியர்களும் சாதாதபர் முதலிய மந்திரசித்தர்களும் வாக்படர்முதலாய மானிட வைத்தியர்களும் வல்லபேந்திரர்முதலிய ரஸவைத்திய உண்மையைக் கற்றவர்களும் மதனபாலன் பசபராஜன்முதலிய வைத்திய சிரேஷ்டர்களும் இப்பூமண்டலத்தை அலங்கரித்தார்களோ அக்காலம்வரையே நம்மவர்க்கு ஒப்பற்ற ஆரோக்கிய முண்டாயது என்பது ஓர் சிறிது. முற்றும் அதற்கு விபரீதமான இக்காலத்து வைத்தியரின் இகழத்தக்க இலக்கணத்தை யெடுத்துரைப்பாம்.

வரும்.

வித்தியாதனச் சட்டமும், மஹரிஷிகளின் அபிப்பிராயமும்.

ஐப1 ஒன்பது வருஷங்களாகப்படிப்பினால் சம்பாதிக்கும் பணத்தை பாகஸ்தர்களுக்குப் பங்கிடலாகாதென்று உத்தேசித்திருந்த சட்டம் இப்பொழுதுதான் திட்டமாகும் நிலைமையில் இருக்கின்றது. அச்சட்டத்தின் தாற்பரியம் யாதெனில், நமது தேசத்திய இந்து குடும்பத்தில் எவனேனும் ஒருவன் ஓர்வகைப் படிப்

[illegible]

பைக்கற்று அதனுலெதையேனும் சம்பாதித்தால் அப்பொருளில் பாகஸ்தர்கள் பாகம் அடையக்கூடாதென்பதே. பாருங்கள்! இத்தேசத்தவர் எவரும் படிப்பினுலேயே பணத்தைச்சம்பாதிப்பதென்பதில்லை. வேறு பல வழிகளில் பலவகையாகக்கஷ்டப்பட்டுச் சம்பாதித்த பொருள்மட்டும் பாகத்துக்கு அர்ஹமென்றும் படிப்பினுல் சம்பாதித்ததுமட்டும் அப்படியாகாதென்பதும் நன்ருகவில்லை யென்பதாகப் பலர் எண்ணுகிருர்கள். இதற்குப் பல காரணங்களை இதுவரை பலர் எடுத்துக் காட்டினர். இப்போதும் எடுத்துக்காட்டுகிருர். இனியும் எடுத்துக்காட்டுவர். ஆனுலவர்களுக்குப் பலன்மட்டும் சிறிதுமில்லை. ஏனெனில், ஜனங்களின் பரிதாபத்தை ராஜாங்கத்தவர் செவிசாய்த்துக் கேட்பதில்லையென்பது தற்காலத்து வழக்கமாய் முடிந்தமையால், நம்மவராலேயே பொறுக்கி எடுக்கப்பட்ட சட்டநிர்மாண சபையங்கத்தினரும், இதுபோன்றவிஷயங்களில் தலையிட்டுக்கொள்வதில்லை. அங்ஙனம் அவர் தலையிட்டுக்கொண்டால்மட்டும் கேட்டகேள்விகளுக்கு உசிதமான சமாதானம் அரசாங்கத்தவரிடம் கிடைக்கின்றதோ அதுவுமில்லை. இதுபோன்ற விஷயங்களில் இறங்கின் முனையை மழுக்குவதுகானகத்திற்கதறியதுபோலவே. இத்தக்காலத்தில் நேர்ந்திருக்கும் துர்த்தசைகளை சுதேசபண்டிதர் எவரும் கவனிப்பதில்லை. அவர்கள் தன் வயிற்றை நிரப்பிக்கொள்வதே பெருங்கர்மமாகக்கொண்டு தன் தர்மபத்தினிமார் திருவுபதேசத்றுக்கேற்றவாறு குடும்பகாரியங்களை முடிப்பாராய் உறங்குகிருர்கள். அந்தோ! நமது குலகோத்திரங்களுக்குரிய நல்லொழுக்கங்களை விட்டொழித்து நாற்காற்பிராணிகளைப்போலக்காலங்கழித்துக் காலனுக்குவசமாகுங்கால் அவன்பாசத்துக்குவகைசொல்ல வழியறியாதுமுழிக்கும்பெற்ரேர்களே சிறிது கேளுங்கள்! உங்களுக்கோர் பெருத்த அனர்த்தம் வந்திருக்கின்றது. அழகிய பூஷணிக்காயைப்போல் புறத்தே மட்டும் பருத்திருக்கும் உமது ஆசைப்பிண்டங்களாகிய அரும்புதல்வர்கள் செய்தசட்டதிட்டங்களைப் பரலோகத்துப் பிண்டத்துக்கும் திண்டாடிநிற்கும் நிலையுள்ள நீவிர் எங்ஙனமறிந்திரில்லை. கலிகாலக் கொடுமை கரைகடந்து போவதை எவரும் உணர்கின்ருர்களில்லையே. என்செய்வோம். குழந்தைப் பருவம்முதல் ஆதரித்து இளமைமுதலலங்கரித்து எழுத்தேற்றமுதல் அவர்கள் வேண்டும்பொருள்கொடுத்து.பிணம்சுமத்தல்முதலியபலவகை அகிருத்தியம்செய்தாவது அல்லது எந்ததுர்தானங்களை

[illegible]

ப்பெற்றுவது அல்லது பிறகு பரிசாரகம் செய்தாவது அல்லது பெற்ரேர் ஆபத்துக்குதவும்படி வைத்தபொருளை விற்றுவது உங்களால் வளர்க்கப்பட்டுப் படிப்பில் தேறிய உங்கள் புதல்வர்கள் உங்களையாதரிக்கின்ருர்களில்லை.. அவர்கள் சம்பாதித்த சில துட்டுகளிலும் உமக்கு எவ்வித பாத்தியமுமில்லையாம். ஒருவனுக்கு வாழ்க்கைப்பட்டு விதவையாய்ப் போனவளுக்கும் அவனது குல தனத்திலாவது சுயார்ஜிதத்திலாவது ஜீவனும்ச பாக்கியமாவது உண்டு. ஐயோ! உம் பிள்ளைகள் சம்பாதிக்கும் பணத்தில் பெற்ரேருக்கு சோற்றுப்பாத்தியமுமில்லையாம். பெற்ரேரடைந்தகடனைப் பிள்ளை கொடுக்கவேண்டிய தவசியமில்லையாம். இதுமட்டோ! வேறு பெரியதோர் அனர்த்தமுண்டு. பாட்டன்பொருளுக்குப் பேரனே உரியவனுதலால் ஒரு பிள்ளையைப்பெற்ற பிதா அந்தப்பிள்ளைபிறந்த தேதிமுதல் பிராசீனசொத்துகளை அந்தப் புத்திரனது வித்தியாபிவிர்த்தி முதலியகாரணங்களின்றி வேறெந்தவழியாலும் பராதீனப்படுத்தக் கூடாதென்பது பழயசட்டம். அந்த வினியோகம் அக்கிரமமென்பதாகப் பிள்ளைகளுக்குத்தோன்றினுல்பிதாவைப் பிள்ளைகள் ருணத்துரோஹ பாபத்துக்காளாக்கலாம். இப்படிச் சட்டதிட்டங்களேற்பட்டிருக்குங் காலத்தில் நியாயமாய் புத்திரர்களின் விருத்திக்காகச் செலவழித்த பணமும் கிடைப்பதற்கு அவர்களெவ்வளவு அந்த வித்தையால் சம்பாதித்தபோதிலும் அதில் ஒருதம்பிடியளவும் கொடுக்கக்கூடாதென்று ஏற்பட்ட சட்டமும் உண்டானுல் இவர் கதி என்ன? ஐயோ! இவர்களுக்கிருபுறத்தும்பாசமாய் இஃதாகின்றது. புத்திரர்களுக்குப் பெற்ரேர்கள் செய்யவேண்டிய படிப்பு முதலிய உதவிகளைச் செய்யாமற்போனுல் அவர்களைப் புத்திரத் துரோஹிகளென்பார்கள். அங்ஙனம் செய்தால் வயதுசென்றகாலத்தில் கைப்பணந்துலைந்து கடன்காறர்களுக்கு வழிசொல்லமுடியாமல் மிக வருத்தமடைவார்கள். இப்பொழுது ஒருவனுக்கு உயர்ந்த இங்கிலீஷ் படிப்பு வரவேண்டுமானுல் பெரியவியாபாரங்களுக்கு முதல் வைப்பதுபோல் ஆயிரக்கணக்காக வேண்டியிருக்கின்றன. அவ்விதம் செலவழித்தபணங்களின் வட்டியுங்கூடச் செலவழிப்பவன் அடையவேண்டிய பாத்தியம் இல்லையெனில் இதற்குமேல் கஷ்டம் யாது இருக்கின்றது. பாருங்கள்! உலகத்தில் பிள்ளைகளைப் படிக்கவைப்பதற்காக ஒவ்வொருவரும் செலவழிக்கிற பணங்களெல்லாம் அவரவர்முன்னேர் சம்பாதித்ததேயல்ல. பல விருத்திகளால் இவரும் சம்பாதித்தபணம்பல. அது குடும்ப சொத்தாயிருந்தபோதிலும் பலபிள்ளைகளைப்பெற்ற ஒரு தகப்பன் அவ்வளவு பணத்தையும் ஒருவனைப் படிப்பிக்கச் செலவழித்து மற்றவரை ஏழையாக்குவது நியாயமா? இங்கிலீஷ்பாஷையைக் கற்று பொது காட்டியப் பதுமைகளாய் தேசாபிமான நாடகமாடும் நவீனர்கள் முதலில் தன் குடும்பத்திலுள்ள பெற்ரேரையும் உடன்

[illegible]

பிறந்தோரையும் ஆதரித்ததொன்றைப் பார்த்தால்இவர்களுண்மையான தேசாபிமானிகளென்றும் தேசாந்தரதுமாசாரத்தை முற்றுந்தெரிந்து கொண்டவர்களென்றும ஏற்படும். அந்தோ! தங்கள்பெற்றோர்களுக்கும்சகோதரர்களுக்கும் உதவாத இவர் தப துபாவனு சகோதரர்களான இந்தியர்களுக்கு யாது உபகாரம் செய்யப்போகின்றார்? மேலும் இங்கிலீஷ் படித்தவரெல்லாம் பூர்ணமானசெல்வம்பெற்றே இருக்கின்றார்களா? அவர்களுந்தான் இங்கிலீஷ்படிப்பால் சம்பாதித்த பணத்தை பெற்றோர் சகோதரர் முதலியவர்களுக்கு சிறிதும்உதவாமல் பிள்ளைகளுக்கே உபயோகப்படுத்தி அவர்கள் பல தடவை பரீக்ஷைகளில் தவறி வீணிற் போவார்களேயானால் இவர்களுக்குத் திரிசங்கு கெதிதான். அவர்கள் படித்துப் பணம சம்பாதித்தாலும் இவர் கெதி அதோகெதியே. அவர்களோ இச் சட்டத்தின் பெலத்தால் தமது நன்றிபறிதலை நன்கு காட்டுவார்கள். இனி ஒருபுத்திமான் தன் பிள்ளையை ஆங்கிலேய பாஷைகற்பிக்க விடுவதற்குமுன் ஓர் ஆலோசனையுண்டு. அதாவது நமது பிள்ளைகளுக்கு நமது பூர்விக சொத்தைப் பாகம்செய்து கொடுத்தால் ஒவ்வொருவனுக்கும் கிரமமாய் கிடைக்கக்கூடிய பொருள் அவர்கள் படிக்கும்வரையில் போதுமா? என்பதே. அதற்குக் குறையுமானால் அவனைப் படிப்பில் செலுத்தாமல் நிறுத்திவிடவேண்டியதே புத்திசாலித்தனமாகும். அதுவும் சில விடத்திற்பொருந்தாது. பாருங்கள் ஒருவனுக்குப் பதினாயிரம்ரூபாய் சொத்தும் நான்கு பிள்ளைகளும் இருந்தன. நமமுடைய தர்மசாஸ்திரப்படி பிதாவும் பிள்ளைகளுமாக ஐந்துபாகம்செய்தால் ஒவ்வொருவனுக்கு இரண்டாயிரம ரூபாய் கிடைக்கும். ஒருவனுக்குப் படிப்பு விஷயத்தில இரண்டாயிரம் செலவழிந்துபோனால் அந்தப் பிள்ளை படிப்பினால் சம்பாதிக்கும் பணத்தைத் தன்கைக்குள்ளே வைத்துக்கொண்டு மற்றப்பாகஸ்தர்வசத்தில் இருக்கும் ரூபாய் எண்ணாயிரத்தில் தமக்குக் கிடைக்கவேண்டிய ஐந்திலொன்றிற்கு விவஹாரம்செய்ய இச்சட்டம் இடம் கொடுக்கின்றது. இது கலிமஹாராஜனாற் செய்யப்பட்ட நியாயந்தான். எந்தப் பிள்ளை தகப்பனார்களுக்குப் பரலோகத்தில் உதவும்படி எள்ளுந் தண்ணீருங்கூட எடுத்திறைக்க மாட்டானோ. அவ்வித நாஸ்திகனுக்கும்மதாந்தரங்களிற்போனவனுக்கும் குடும்பத்தில் பாகம் கொடுக்க வேண்டுமென்ற சட்டமொன்று நமக்குப் போதாதா? இஃதொன்றுதான் மிகுதிபோலிருக்கின்றது. இஹலோகத்திலும் உபயோகமில்லாமல் பெற்றோர்களுக்கு அந்தியகாலத்திற்குச் சோறும் கொடுக்கப் பாத்தியமில்லாதிருக்கும் பிள்ளைகளுக்குப் பெற்றோர் தம் குடும்பச்சொத்தைச் செலவழித்து ஆங்கிலேயப் படிப்பைக் கற்றுக்கொடுக்கவேண்டுமென்பது மிகவும் நீதியினும் நீதியே. ஆனால் பிள்ளைகளிடத்தும் பயத்தோடு கெஞ்சிக் கஞ்சியை வாங்கிக் காலங்கழிக்க இக்கிழவர்களுக்கு நேர்ந்த இச் சங்கடம் எப்படித்தான் போ

[illegible]

றக்கமுடியும்- ஐயோ ! ! இவ்வளவு மேலுங் கீழுமா ய்ப் புரண்டுவரும் உலகநிலையைச் சிறிதுங்கவனியாது குறட்டைவிட்டுத்தூங்கும் சோம்பேறி வைதிகர்களின் பெருமையை யாம் என்சொல்வோம். இவ் விஷயத் தில் மஹரிஷிகளுக்குப் பூர்ண சம்மதமிருக்குமென் பது ஆக்ஷேபமில்லை. எங்ஙனமெனில் ஓர் ஊரில்ஒரு பிரபுவின் குமாரன் வெகு அயோக்கியனுயும் விடனு யுர் திரிந்துகொண்டிருந்தான். அவனது பெண்சாதி அவன் சுபாவத்தை யறிந்து அவனிடத்தன்புள்ளவள் போல் சிறிதுகாலம் நாட்டியம் செய்து அவனுடைய சொத்தெல்லாவற்றையும் சுவாதீனம்செய்துகொண்டு இவன் தேஹபெலமும் கைக்காசும் தொலைந்தபிறகு அவனிடத்திருந்த ஓர் வேவுகாறத்தடியனைத் தனக்குப் புருஷனுகவமைத்துக்கொண்டு தமக்குச் சொந்தமான வீட்டினிடத்தேயும் குடியிருக்கவொட்டாமல் வெருட் டினுள். அவன் வயதுசென்று பிக்ஷை யெடுக்கவும் வகையறியாமல்திரியும்பொழுது அவனைப்பார்த்தபலர் இவன் ஆதி காலத்தில் தன பெண்சாதியை விட்டுப் பிறர் மனைவிகளை இச்சித்துக் கற்பழித்த பாதகத்தி ற்கு இப்பயனை அனுபவிக்கின்றுன். இஃதொருவழி நியாயமென்பர். அங்ஙனம் ஏதோ பூர்வ புண்ணி யவசத்தால் பாதகண்டத்தில் மஹரிஷிகளின் வம்ச ங்களிற்பிறந்த பிள்ளைகளை இம்மையிலும் மறுமையிலும் கர்மஞானங்களால் சித்திபெறவொட்டாமல் தடுத்திரு பத்தாறு எழுத்துள்ள ஈரெழுத்தேறிய காயத்திரியை (காயத்திரி•இருபத்துநான்கெழுத்தாதலால்) உபதேசி த்து நாத்திகம் கிரிஸ்தவம் முதலிய விபரீத மதவாடை களை அவரது இளமை பொருந்திய நற்புத்தியிலேற்றிப் பாழாக்கிவிட்ட இப்பெற்ருேர்களுக்குக் கிழத் தனத் தில் அஞ்சியஞ்சிக் கெஞ்சிக்கெஞ்சிக் கஞ்சியென அலையச்செய்வது மிகவும் உசிதமேயாமென்க. ஐயோ! தன் பிள்ளைகள் குபேரனுக்குக் குச்சிதமபேசும் நிலை மையில் மிகுந்த ஐசுவரியத்துடன்சௌக்கியத்தையனு பவித்துக்கொண்டிருக்கக் குடியிருக்க இடமற்றும் குடிக்கக் கஞ்சியற்றும் கடன்காறர் கடனுக்குச் சிறைப் படுத்தினுல் அங்குசென்றும் செத்தாலும் அவர்கள் பிக்ஷையெடுத்தாலும் அவர் பிரேதமனுகமானுலும் இப் பிரபுக்களுக்கு அதிலேதேனும் குறையில்லைப்போலும் பெற்ருேர்களே கற்ருேர்களே மற்ருேர்களே உற்ருேர்களே எமது முன்னேர் முனீந்திரர்மனம் புண்படும் படி நீங்கள் செய்த மஹா பாபப்பயனல்லவோ உங்களுக்கு நேர்ந்திருக்கின்றது. அதிகமான புண்ணியபா பங்கள் உடனே பயன் கொடுக்குமென்ப் பெரியோ ரருளிய நல்வார்த்தை உங்களிடத்தில் பயன்பெற்றது. பாருங்கள்! இக்காலத்திற் பெற்ருேர்களால் தமக்கிரு ந்த புரோஹிதத் தொழிலைவிட்டுச் சிறிது ஆங்கிலேயம் கற்று அதனைப்பிரதியிலேவிட்டுத் திண்டாடும்படி அனேகம பிள்ளைகள் செய்யப்பட்டார்கள். ஆகவே இக் காலபெலத்தாலே குறைந்துவரும் பிதுருபக்தி மாதுரு பக்தி பிராதுருபக்திகளுக்கு இச்சட்டமும மிகச் சாதகமே. ஆனுல் இனி அற்ப பணக்காறன் பிள்ளைகளைப்

[illegible]

[illegible]

[illegible]

டிப்பிக்கத் துணியமாட்டாதைலால் ஒருவிதமாய் இங்கிலீஷ்படிப்பு இத்தேசத்தில் இனிக்குறையும். ஆனல் இக்காலத்துப்பிரபுக்கள் "நமக்கோ பணம் ஏராளமாயிருக்கின்றது. நம் பிள்ளைகளுக்குப் படிப்பை ஊட்டுவோம். அவர்களே நல்ல ஸ்திதியை அடைவார்கள். ஏழைகள் வீட்டுப் பிள்ளைகள் என்றும் ஏழைகளாகவேயிருப்பார்கள். அப்பொழுது நம் பிள்ளைகளுக்கு போட்டியாக அவர்கள் உத்தியோகத்திற்கு வரமாட்டார்கள். அப்பொழுது எம்பிள்ளைகளிட்டதேசட்டமாகும், என்றெண்ணக்கூடும். இச கொக்குப்பிடிக்கும் வித்தை ஆனலும் இப்பொழுது அளவு கடந்து வளர்ந்துவரும் ஆங்கிலேயபடிப்பைக் கெடுக்க வேண்டுமென்றே. என்றும் பணக்காறர்களைப் பணக்காறர்களாயும் ஏழைகளையேழைகளாகவும் வைக்க வேண்டுமென்ற விபரீத எண்ணத்தாலோ வைதிக மார்க்கத்தை முன்னுக்குக் கொண்டு வரவேண்டுமென்ற எண்ணத்தாலோ தனது கிழத்தனத்தில் பிள்ளைகளையெதிர்பார்ப்பது பெற்றோர்க்கும் மற்றோர்க்கும் நியாயமில்லையென்று காட்டுவதற்காகவோ அல்லது நீடுழிகாலமாய் நிலைபெற்றுவரும் குடும்ப சம்பிரதாயத்தை இந்தியாவில் தொலைக்கவேண்டுமென்ற கெட்ட அபிப்பிராயத்தாலேயோ வேறு எக்காரணத்தாலேயோ அறியேம் இச்சட்டம் உண்டானது நம் முன்னோர்கள் செய்த புண்ணியம் ஏதேனும் மிகுதியிருந்தால் அது சென்னை கவர்னர்களவர்களிடத்தும் ராஜப்பிரதிநிதியிடத்துமாவது அனுமதிபெருமலொழியலாம். மரண பரியந்தம் சிகித்ஸை செய்வதுபோல இவ்விஷயத்தில் தர்மசாஸ்திரத்தின் கருத்துகளையெடுத்துக்காட்டி அதனைத்தடுப்பதற்கு வித்வான்கள் இப்போதாவது முயற்சி செய்யவேண்டுமென்பது ப்ரம்மவித்தைப் பண்டிதர்களிடத்தில் தாழ்மையாய்ச்செய்துகொண்ட சிறு விண்ணப்பம்.

சுபம்.

ஸம்ஸ்கிருதசந்திரிகை

இப்பெயர்கொண்ட பத்திரிகையொன்று கொல்லாபுரத்திலிருந்து சுமார் ஐந்து வருஷமாய் நிலைபெற்றுவருவது. அதனை யப்பத்திராதிப ரனுப்பவும் பெற்றோம். இஃது சுதேசபண்டிதர்களுக்கு மிக்க சுக காமும் நல்லகாரியங்களுக்குப் பெரு நிதியும் சொற்சுவை பொருட்சுவை முதலிய நற்குணம் நிறைந்த வடமொழிக்குச் சஞ்சீவினியும் ரசிகர்கள் உள்ளத்திற்குப் பெரியசந்தோஷ காமுமாய் ப்ரம்மஸ்ரீ அப்பசர்மாவென்ற வித்துவானல் நடத்தப்பட்டுவருகின்றது. கவியெங்கே? நல்லோர் முயற்சி யெங்கே? ரசங்களெங்கே? ரசமலிந்த கவிகளின் நன்மொழிகளெங்கே? துர்ச்சனர்களை ஒழிப்பதெங்கே? நல்ல சாஸ்திரங்களைமுன்னுக்குக்கொண்டுவருவதெங்கே? இவையெல்லாம் ஓரிடம் சேருமானல் அங்கு சிவ்கிருபை நிறையுமென்பதும் நமது

[illegible]

𑌪𑌤𑍍𑌰𑌿𑌕𑌾𑌃

[illegible]

𑌨𑌮𑌃 𑌶𑍍𑌰𑍀 𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌯𑍈

[illegible]

பூர்வமுனிவர்களின் அனுக்கிரககடாக்ஷம்பரிபூர்ணமாய் இருக்கிறதென்று நம்புவதிற்றடையென்ன? கலியின் வலியாற்றோன்றிய பலவிபரீதவிதங்களாகியவையால் பட்ட கஷ்டத்தைத் தொலைத்துக்கொள்ள இச் சம்ஸ்கிருத சந்திரிகையைப் பெரியோராதரிக்கின்றார். ஏதோ பெரியோர் கிருபையால் பதின்மூன்றுவருஷ காலங்களாக ப்ரம்மவித்தை தென்னாட்டிலுலாவிவருகின்றது. மலையாளநாட்டில் அதற்குச் சற்றேறக்குறைய உற்ற சகோதரியாய் விஞ்ஞான சிந்தாமணி உலாவிவருகின்றது. வடநாட்டில் சமஸ்கிருதசந்திரிகையும் உற்பத்தியானது எமது ஸமஸ்கிருதபாஷையின் அபிவிர்த்திக்கு ஓரறிகுறியே. அனேகம் பெரியோர்கள் சிரங்கொண்டு தோத்திரம் செய்யக்கூடிய இந்த சமஸ்கிருத சந்திரிகைவிருத்திபடையும்படி பரமேசுவரனது திருவருளைச் சிந்திக்கின்றோம். இது அற்பமூல்யமுள்ளதாகையால் இதனையெவ்விதத்திலும் ரசிகரானபண்டிதர் ஆதரிப்பாரென எதிர் பார்க்கின்றோம். சுபம்.

கடிதம்

கடிதகர்த்தர்களின் அபிப்பிராயங்களுக்குப் பத்திராதிபர் உத்தரவாதியல்ல

நம: ஸ்ரீ ப்ரம்மவித்தியாயை.

மகான்களே! பண்டிதமணிகளே! ப்ரம்மவித்தியாநன்பருள் யானுமொருவனெனத் தங்களுக்கு முன் அடிக்கடி சொல்லவேண்டுவதவசியமன்றன்றோ. இப்பொழுதோ காலக்கொடுமையினால் ப்ரம்மவித்தையைப்படிக்கவும் அதின் ஸாரமான முக்கிய கருத்தை நிச்சயிக்கவும் சிறிதேனும் சமயம் வாய்க்கவில்லை. அதுபற்றியே கொஞ்சநாளாக ஒரு விஷயமுமெழுதியனுப்பவில்லை. அம்ம! ப்ரம்மவித்தையே! இவ்விரண்டபராதத்தையும் பொறுத்தருள்வாயென்று முழு நம்பிக்கையுடனெழுதலானேன். நீ மாதமிருமுறைதான் வெளிவருகிறாய். அதிலும் சரியானகாலத்தில் வெளிவராததைப்பற்றி உனது நேசர்களிலெவர்தான் வருந்தமாட்டார்? கொடுமையான இக்கலிகாலத்தில் அருமையான ஸம்ஸ்கிருத பாஷையைக்கொண்டாடி அதிலேயே பத்திரிகைளைப் பிரசுரிக்கவும் அதன்மூலமாய்நமது முன்னோர்களான மகான்களின் நல்வழியையும் மகிமையையும் பிரகடனஞ்செய்யவுமுயன்றப்ரம்மஸ்ரீ-ஸ்ரீநிவாஸ சாஸ்திரிகளின் பிரயத்தனஞ்சில பயனுள்ளதாகவும் சிலது பயன்படாததாகவு மாகின்றதைப்பற்றி மிக்க விஸனமுறுகிறேன். அம்ம! ப்ரம்மவித்தையே! இதற்குமுன் பண்டிதர்களான வைஷ்ணவர்கள் சைவர்கள் சாக்தர்கள் பக்தர்கள் முதலாயினோர் புதிது புதிதான உபன்னியாச மணிமாலையால் உன் சரீரத்தை நன்கு அலங்கரித்தார்கள். இப்பொழுதோ அங்ஙனமில்லாததுபற்றி ஸமஸ்த பாரங்களும் பத்திராதிபர்கள் தலையில் சுமந்தபடியால் உன் விஹாரமும்தாமதிப்பதாகத் தோன்றுகிறது. பத்திராதிபரவர்கள் சமஸ்த காரியங்களையும நிர்வஹிக்க வல்லமையுடையவர்

[illegible]

களானாலும் அனேக வித்வான்கள் பல விஷயங்களை எழுதி யனுப்புவார்களாகில் பத்திரிகைக்குச் சிறந்த அழகு உண்டாகுமன்றோ. இனி பண்டிதர்கள் அங்ஙனமே முயலுவார்களென நம்புகின்றோம். தற்காலத்தில் இப்பரதகண்டத்திலும் மற்றும் தேசாந்திரங்களிலுமெங்கும் ஸ்கூல்களிலும் பாடசாலைகளிலும் படிக்கவேண்டிய புஸ்தகங்கள் யாவும் நாகரவெழுத்திலேயே வழங்கிவருகின்றன. அதனாற்றான் விஞ்ஞானசிந்தாமணியும் நாகரவெழுத்துப் பதிப்பைப்பெற்றது. இங்ஙனமே அனேகம் பத்திரிகைகள் நாகர லிபியிலேயே பிரசுரமாகிவருகின்றன. அவ்வெழுத்திலெழுதப்பட்ட கிரந்தங்களே வெகு சீர்த்தியாகவும் மேன்மைபெருந்தியதாகவுமிருக்கின்றனவென்பதை யாவருமறிந்தேயிருப்பார்கள். ஆதல்பற்றி இப்ப்ரம்மவித்தையும் நாகர லிபியில் அச்சிடப்பட்டால் மேல்மேலும் அது விருத்தியடையுமென்று அனேகர் அபிப்பிராயப்படுகிறார்கள். கல்கத்தா பம்பாய் முதலிய நாடுகளிலுள்ளவாக்குமுபயோகப்படும் இவ்விஷயத்தைப் பத்திராதிபரவர்கள் நன்காலோசித்துத் தனதபிப்பிராயத்தைப் பத்திரிகை மூலமாய்ப் பிரசுரித்து பத்திராபிமானிகளினபிப்பிராயத்தையு மறிந்துகொண்டு அங்ஙனமே செய்ய முயலுவார்களெனத் தெரிவிக்கிறேன். எவ்விதமாயினுமர்குக.மேல்மேலும் விருத்திக்கு வரவேண்டுமென்றதே யாம்கொண்ட கருத்து. ஸ்ரீமான் விவேகானந்தஸ்வாமிகளைப்போல் லோகோபகாரமாகவே பிரஸங்கஞ்செய்ய அனேகவித்வான்களைத்தயார் செய்து அவர்கள் செய்யும் ஒவ்வொரு பிரஸங்கத்திலும் நமது மதாசாரவிஷயமாகவே பேசும்படிச் செய்யவேண்டியது.அதில் ஒருவனைப்பற்றித் தூஷிக்கக்கூடாது ஸ்ரீசங்கராசாரியஸ்வாமிகள், ஸ்ரீராமானுஜாசாரியர், ஸ்ரீ ஆனந்த தீர்த்தாசாரியர் ஸ்ரீ ஸ்ரீகண்டசிவாசாரியர் முதலிய நமது பூர்வாசாரியர்கள்சொன்ட வழியையே அவ்வம்மதஸ்தர்கள் ஆதரிப்பார்களேயன்றி ஒருவர் தனது மதத்தை இகழ்ந்துபேசினார்களென அதை விட்டுவிடமாட்டார்கள். இதுவுமுசிதமே. பரவஸ்துவோவென்று என ஆசிரியர்கள் யாவருங்கொண்ட கருத்து.ஆனால் ஒன்றாகிய அவ்வஸ்துவிற்கே வெவ்வேறு பெயர் சொல்லுகிறார்கள். அது எப்படியெனில், சைவர்கள் சிவனென்றும், வைஷ்ணவர்கள் விஷ்ணுவென்றும், சாக்தர்கள் சக்தியென்றும், வேதாந்திகள் ப்ரம்மமென்றும், மற்றுமனேகர் அனேகவிதமாகவும் சொல்லுவார்கள். அதனால் யாதொருகேடும் நேரிடாது. "எவனெவன் எந்தெந்த தேவதையைப் பக்தி சிரத்தையோடு பூஜிக்கக் கருதுகின்றானோ அவனவனுக்கு அந்தந்த பக்தியை யானே இடையூறின்றிச்செய்கிறேன்" என்றல்லவா பகவற்கீதையிற் சொல்லப்படுகிறது.இவ்வசனத்தை விட நம்மவர் யாவருக்கும் சமாதானத்திற்கேதுவாய் உபகாரத்தை விளைக்கும்படியாயுள்ள வேறொரு வசனமும் கிடைக்கவே கிடைக்காது. எல்லா மதஸ்தர்களுக்கும் ஈசுவரனொருவனே. பெயர் வெவ்

[illegible]

𑌇𑌤𑌿 𑌶𑌿𑌵𑌂 𑌶𑌿𑌵𑌂 𑌶𑌿𑌵𑌮𑍍 —

[illegible]

𑌚𑌤𑍁𑌰𑍍𑌵𑌰𑍍𑌗𑌪𑍍𑌰𑌕𑌾𑌶𑌿𑌕𑌾.

[illegible]

வேறுயிருப்பதால் அவரவர்களுக்கு யாதொரு தோஷமுமில்லை. பாருங்கள்! ஹரி யென்றது ஒருபெயர். சிவனென்பது ஒரு பெயர். எந்த பரமாத்மாஜீவகோடிகளனைத்தையும் தன்னிடத் தாட்கொள்ளுகிறுரோ. அவரை ஹரி என்றும் யாதொரு குறையுங்குற்றங்களுமின்றி. சர்வ்மங்களரூபியாய் விளங்காகின்றவரைச் சிவனென்றும் சொல்லுகிறுர்கள். இதுவே ஆசிரியர்கள் கொண்டவழி. ஆனால் யாரிடங் குற்றமுண்டென விசாரிப்போமாயின், எவன் சிவநாமத்தைத்தூஷிப்பவனே அவன் விஷ்ணுநாமத்தையும் தூஷிப்பவனே. ஆகையால் எவனொருவன் சிவபக்தனே அவன் விஷ்ணுபக்தன். எவன் விஷ்ணுபக்தனே அவனும் சிவபக்தனே. இவ்வழியைப் பக்தர்கள்கொள்ளவேண்டும். கொள்ளாவிட்டாலும் உள்ளது உள்ளபடியிருக்குமேயன்றி வேற்றுமையடையாது. இவைகளையெல்லாம் ஆலோசித்துப் பத்திரிகாநண்பர்கள் எழுதுவார்களாகில ஜகத்துக்கே பேருபகாரமாயிருக்கும். அம்ம, ப்ரம்மவித்தையே! இருள்சூழ்ந்த எனக்கு உனது சம்பாஷணையில் இடையூறின்றிப் பிரவிருத்தியைக்கொடுத்தருள்வாயாக. பாவத்தைத்துலைத்து கஷ்டத்தைவிலக்கி காமக்குரோத முதலிய தோஷங்களைத் தடுத்து பொறுமை முதலிய நற்குணங்களைக்கொடுத்து ஈசுவரபக்தியைத் தந்தருள்வாயாக- நமது ஆரியதேசத்தில் எங்குமோங்கிவளர்ந்து வைதிக லௌகிகஜனங்களனைவர்களையுங் காத்தருள்வாயாக- எல்லாமறிந்த உன் சன்னிதியில் பலவாறுகவெடுத்துரைக்கவேண்டுவதவசியமன்றன்றே.

சிவம் சிவம் சிவம்.

எங்குங்குசலமே யுண்டாகுக-

இங்ஙனம்,

திருமலைசாஸ்திரி-

சதுர்வர்க்கப் பிரகாசிகை.

ஆரியர்காள்! ஒிறிதிங்கு கருணைகூர்ந்து கவனியுங்கள்! மானிடராய்ப்பிறந்து அதிலும் பிராமணஜன்மத்தையடைந்தவர் புருஷார்த்தங்கள் நான்கையும் அவசியம் சம்பாதிக்கக்கடவரென முன்னோராகிய நமது பண்டிதமணிகள் கூறியிருக்கிறுர்கள். மானிடப்பிறவியோ கிடைப்பதரிது. நான்குவித யோனிகளில் கன்மவாசனைக்கேற்றவாறு சுற்றி அலைகின்றஜீவராசிகள் அனேக ஜன்மங்களில் பற்பல புண்ணியகர்மங்களைச் செய்து அதனுல் ஈசுவரகடாக்ஷம் பெற்றுலல்லவோ அப் பிறவியை அடைவார்கள். அருமையான இந்தப்பிறவியிலும் பிராமண்யத்தை யடைந்தவர்கள் யாதொரு பயனையுமடையாமற்போனுல் இதைவிட அவர்க்கேதேனும் கெடுதியுண்டோ. அங்ஙனமே ப்ரபோதசுதாகரத்தில் பகவத்பாதாசாரியரவர்கள் 'அண்டஜம்

[illegible]

சுவேதஜம் ஜராயுஜம் உற்பிஜம் என எண்பத்தொருலக்ஷம் பிரிவான நால்வகை யோனிகளுள் மானிடப்பிரவி சிறப்புற்றது அதிலும் அந்தணராய் ஜனிப்பது மேன்மைபற்றியது. அதிலும் தன் குலாசாரத்தை விசாரிப்பது மேலானவை. அதிலும் வேதத்தையப்பஸிப்பது மிக்கச் சிரேஷ்டம். அதிலும் அனாத்மாவாகிய தேகாதிகளை யழிந்துபோவதென வறிந்து ஆத்மவிசாரணை செய்வது மேன்மையினும் மேன்மையே- இங்ஙனமிருக்க பண்டிதர்களும் தனது ஆயுளை வீணுக்கழிக்கின்றார்கள். 10000 கோடி திரவியங்கொடுத்தாலும்கிமைப்பொழுதேனுங்கிடைக்கக்கூடியதா ஆயுள் அதை முழுவதும் வீணிற்கழித்துவிட்டால் அதைவிடக்கேடு ஏதேனுமுளதோ? அங்ஙனமே விவேகசூடாமணியிலும் இன்னும் மற்றவிடத்திலும் கூறியிருக்கிறார்கள். உண்ணல் உறங்கல் முதலியவைகளால் மனிதனைவிடச் சிறந்த மிருகங்களிருப்ப அச்சிறப்பு மனிதனுக்கே என்பது யாங்ஙனமெனின் கூறுவாம். ஊண் முதலியவைமிருகங்களுக்கு அதிகந்தான். அன்றியும் அவைகளினுணவோ சாரமற்ற வைக்கோல், புல்முதலியவையே குடிப்பதோ குட்டைகளின் நீரே. ஆயினும் அவைகள் அனேகம் சுமை சுமைக்கப்பலமுடையவைகளாகவிருக்கின்றன. அவைகளுயிருடனிருந்தால் யாவருக்கும் வெகு பயனுண்டு. இறந்தாலும் அதின் தோல், மாம்ஸம், எலும்பு மற்றும்னேக அவயவங்கள் பிரயோஜனப்படுகின்றன. மிக்கவன்புடனவைகளை அனேகர் கிரகித்துக்கொள்ளுகிறார்கள். மனிதர்களோவெனில், அறுசுவைகளுடனும மற்றுமனேக காய், கறி, தின்பண்டங்கள் கனிவர்க்கங்கள் இவைகளுடனும் நல்லஆகாரங்களைச்சாப்பிடுகிறார்கள். குளிர்ந்த நீரில் விலாமிச்சை முதலியவைகளைப்போட்டு வாஸனையுடன் குடிக்கின்றார்கள். கஸ்தூரி, பன்னீர், முதலிய வாசனை வஸ்துக்களைப் பூசிக்கொள்ளுகிறார்கள். வெண்மையான வஸ்திரந்தரிக்கின்றார்கள். விலையுயர்ந்த ஆபரணங்களை யணிந்துகொள்ளுகின்றார்கள். சிலர் காலையிலும் மாலையிலும் சரீரபலத்திற்காக மல்லர்களைப்போல் விளையாடுகின்றார்கள். புஷ்பசயனத்திற்கொப்பான ஹம்ஸதூலிகாமஞ்சத்தின் மீது அழகிய மாதர்களைக் கட்டியணைந்துறங்குகின்றார்கள். பெயர்பெற்ற வைத்தியனைக்கொண்டு செய்வித்த சிறந்த ஔஷதிகளையும் சாப்பிடுகிறார்கள். ஆயினுமிவர்கள் டலவீனர்களே. இவர்களால் மிகுதியான பாரம் சுமக்கமுடியாது. இவர்களின் ஸ்திரீகளை அபலை (பலமற்றவள்) எனவே சான்றோர் கூறுகின்றார்- இங்கு மற்றோரற்புதமுண்டு- பசுக்களின் மூத்திரத்தையும் சாணியையும் சுத்திக்காக உபயோகப்படுத்துகிறார்கள்- த்வக் (தோல்) எலும்பு முதலியவைகளைப்பற்றியஅசுத்தியை நீக்குவதற்காக தயிர் நெய் குசோதகம் (தர்ப்பை சம்பந்தப்பட்ட தீர்த்தம்) இவைகளுடன் பசுவின் மலமூத்திரங்களையுஞ் சேர்த்துப் பண்டிதர்களும் சாப்பிடுகிறார்கள்- எருமைகளின் மலமுமூலர்ந்தால்

[illegible]

எரிக்கவுமுபயோகப்படுகின்றது. பெரிய வீதிகளில் மிருகங்கள் மலமூத்திர விஸர்ஜனஞ்செய்யினும்அவைகளையொருவனுந் தண்டிக்கிறதில்லை. மனிதர்களோவெனில் சரத்காலத்துப் பூர்ணிமையிலுதித்த சந்திரனைப்போல் வெண்மையான தத்யன்னம் (தயிர்சாதம்) பாயஸம் பணியாரங்கள் முதலிய ருசியுள்ளபதார்த்தங்களையே சாப்பிடுகின்றார்கள். ஆகிலும் இவர்கள் பலமூத்திரவிஸர்ஜனஞ் செய்வதைக் கண்டால் பாமரனுமிகழ்ந்து பேசுவான். பட்டணங்களின் வீதிகளில் மனிதன் மலமூத்திர விஸர்ஜனத்திற்காக உட்கார்ந்தானாகில் ராஜாங்கத்தார் அவனைச் சிறையிலிடுகின்றார்கள். நல்ல வாசனை வஸ்துக்களும் இவர் சரீர சம்பந்தத்தால் நாற்றமெடுக்கின்றது. அங்ஙனமே சூதசம்ஹிதையில் யக்ஞவைபவகண்டத்தில் 'சந்தனம் அகில் பச்சைக் கற்பூரம் முதலிய வாசனை வஸ்துக்களும் திவ்யமாகிய அன்னம் பக்ஷணங்களும், நற்கந்தமுள்ள குளிர்ந்த நீரும் சரீர சம்பந்தத்தால் மலமூத்திரங்களாகவும் வெண்மையான வஸ்திரங் கறுப்பாகவுமாகின்றன. அன்றியும் ரத்தம் மாம்ஸமிவைகளினின்றும் அனேக கிருமிகளுண்டாகி அவைகளாலும் மலங்களாலும் நிறைந்த இப்பிண்டத்தை சிலாக்கியமெனச்சொல்லத்தகுமோ அந்தணர்களே' எனப் பலவாறுகக்கூறப்பட்டுள்ளன. இங்ஙனமிவர் உயிருடனிருக்குங்கால் ஒன்றுமுபயோகப்படாமற் போவதுடன் மரித்தாலும் ஏதேனுமுபயோகப்படுமோ. இவனெலும்பை வழியிற்கண்டவர்கள் ஸ்பரிசிக்கவஞ்சி விலகிச்செல்லுகிறார்கள். அறியாமல் தொட்டவர்களோ ஸ்நானஞ்செய்கின்றார்கள். இங்ஙனமனேக துர்க்குணத்திற்குக் கற்பகம்போன்ற மானிட சரீரத்தையடைந்தவர்களுக்குப் பகுத்தறியுங்குணமொன்றைத் தவிர மிருகங்களைக்காட்டிலுமேதேனும் வேற்றுமையுளதோ அங்ஙனமே சான்றோர் 'ஞானமொன்றே மனிதற்குச்சிறந்த குணமாகும். அதல்லாதவன் மிருகங்களுக்கொப்பானவனே' என. ஞானமென்றால் பணந்தேடுவதற்கும் மனைமக்களைக் காப்பதற்குமுரியவறிவல்ல. அது புல்கவர் மிருகங்கள் முதலியவற்கு முண்டன்றே. ஆயின் கன்மராசிகளையொழிப்பதும், கைவல்லிய பதவியைத் தழைப்பதுமே ஞானமெனப்படும். அவ்வொன்றினுற்றான் மனிதர்கள் சிறந்தவர்களாம். அதையடையும்பொருட்டு அனேக வுபாயங்கள்ச்சுருதிகூறுகின்றது. அவைகளாவன— 'ஸத்தியமுரைக்கவேண்டும். தருமமனுஷ்டிக்கவேண்டும். இடைவிடாது

[illegible]

[illegible]

வேதங்கற்கவேண்டும். சிரத்தையுடன் தானங்கொடுக்கவேண்டும். சிரத்தையின்றிச்செய்வதுகூடாதெனவும், அப்பொருளைப் பிராமணர்கள் வேதமோதலாலும், யாகஞ் செய்தலாலும், தவம்புரிதலாலுமறிய விரும்புகிறார்களெனவும், ஸத்தியமே ஜயிக்கிறது. பொய்யானது ஜயிக்கிறதில்லை. ஸத்தியத்தால் அர்ச்சிராதிமார்க்கமானதுண்டாகிறது' என. அங்ஙனமே ஆசாரியாரவர்களும் 'அழுதுகொண்டிருக்கிற தன் குழந்தையை ஸமாதானப்படுத்த தாயானவள் திராக்ஷப்பழம், பேரிச்சை, மாம்பழம், வாழைப்பழம் முதலியவைகளை முன்காட்டுவதுபோல் உபநிஷத்தும் அனேக ஜன்மங்களிலுண்டான அக்ஞான சம்ஸ்காரத்தால் சூழப்பட்ட சித்தத்தைப் பற்பல ஞானோபாயங்களால் தெளிவிக்கிறதென்று கூறினார்கள். அங்ஙனமே சூதசம்ஹிதையில்- "எங்ஙனம் தாயானவள் தன் குழந்தைக்கு உண்மையானவைகளையே போதித்து நல்வழிக்குக் கொண்டுவருவளோ அங்ஙனமே யாவருக்கும் மெய்யையே சுருதி கூறுகின்றது. அதிகாரிக்குத் தக்கவாறு கர்மகாண்டம் ஞானகாண்டமென இரண்டு காண்டங்கள் பிரவர்த்தித்தனவெனக்கூறப்பட்டது. இப்படியிருக்கச்சிலர் இக்காலத் தாசாரமுதிர்ச்சியால் அதிகாரிக்குத் தக்கவாறு வெவ்வேறாகக்கூறியிருப்பதின் கருத்தையறியாமல் ஒன்றுக்கொன்று பேதப்பட்டிருக்கிறதென்று சுருதியைநிந்திக்கின்றார்கள். அன்றியும் அதைக் கற்குமாரியமணிகளைப்பரிகசிக்கின்றார்கள். அவர்களுக்கு இதன் நியாயத்தை கன்கெடுத்துக்கூறுவாம்.

வரும்.

உற்பாதங்களினுற்பத்தியும் அதைவிலக்குமுபாயமும்

ஆரியர்காள்! இக்கலிகாலத்தில் ஜகத்துக்கே சம்பவித்ததீங்குகளைத் தங்கள் முன்னிலையில் சிறிது தெரிவிக்க சங்கற்பித்து முன்வந்தேன். சென்ற கார்த்திகைமாதத்தில் விருச்சிக ராசியில் ஏழு கிரகங்கள் கூடப்போகின்றனவென்று வேதவாக்கியத்தைப்பிரமாணமாகக்கொண்ட சோதிட வித்துவான்கள் கூறியதற்கு அக்காலத்திலேதேனும் பீடை யுண்டாகலாமெனப் பொருள்படுத்தி அதைத்தொலைக்கவும் உலகப்பொதுநன்மையை விளைக்கவும் விரும்பிய அனேகர் ஜபம், ஹோமம், உபவாசம் முதலிய தவம், ஸ்நானம், தானம் முதலியவனேக தருமங்களை யனுஷ்டித்தார்கள்.

[illegible]

அக்காலத்தில் யாதொருதீங்கும் நேரிடவில்லை. அது கொண்டே சிலர் சோதிடசாஸ்திரத்தைப் பொய்யென்றுங்கூறினர்கள். இப்படியிருக்குங் காலையில் சென்ற தைமாதம் 26உ யன்றிரவு சுமார் 3-மணிக்கு ஜீவராசிகளெல்லாம் 'படுத்து நன்றாய் நித்திரைசெய்யுங்கால் இரண்டு மூன்று நிமிஷம்வரை பூகம்பமுண்டாயிற்று. அச்சமயத்தில் யாவரும் நித்திரைவிட்டெழுந்து பகவானைத்தியானித்தார்கள். அக்காலத்தில் யான் மதுரையிலிருந்தேன். அப்பொழுது ஜனங்களுக்குண்டான பக்தியைப் பார்த்தேன். எல்லோரும் மீனாக்ஷி! சுந்தரேச! பகவானே! காத்தருள்வாயென உரத்த சத்தமிட்டார்கள். சில சுவர்கள் விழுந்தன. சில வீடுகள் இடிந்தன. இது சிறிது நிமிஷங்கூட யிருந்துமானல் வீடு கோபுரம், பர்வதம், ஆறு, சமுத்திரம், முதலிய எல்லாவற்றும் நசித்துவிடும். இங்கு சிறிது விசாரிப்போம். நாஸ்திகர்கள் ஜகத்தைப்படைத்துக் காப்பவனாகிய ஈசனையில்லையென்றே சொல்லுகின்றார்களல்லவா? அங்ஙனமாயின் இப்பூகம்பத்தை யுண்டாக்கினவர் யாவர்? நீக்கினவரும் யாவர்? இது மனிதனால் சாதிக்கக் கூடியசெய்கையா? இல்லை இல்லை. ஆனால் ஜெகதீசனாலேயே உண்டுபண்ணப்பட்டு நிவர்த்திக்கப்பட்டது அப்பொழுது நமது சாமார்த்தியம், கல்வி, செல்வம், ஆண்மை, பலம், அறிவு யாவுங் குன்றிவிட்டதன்றோ 'பயத்தைச் செய்பவர் பயத்தைத் தொலைப்பவர்'ஆகிய பகவானே யாவருந் தன்னை ஸ்மரிக்கவேண்டித் தானே பூகம்பத்தையுண்டாக்கித் தானே விலக்கினர். இங்ஙனம் சர்வசக்தனான சிவபெருமானையாவது பங்கஜாக்ஷனான ஸ்ரீமந் நாராயணபகவானையாவது எக்காலமுந் தியானிப்போமாயின் இத்துன்பம்வராது. இஃதொர்புறங் கடக்க. மழை மாரியில்லாமையால் எங்கும் பயிர் வளராமல் தானியம் விளையவில்லை. பஞ்சமும் மிதமிஞ்சியே ஓங்குகின்றது. பயிரிடுவோரெல்லாம் தனதுமுயற்சி பயன்படாமையால் வருத்தப்படுகிறார்கள். ப்ளேக் என்ற மகாமாரியும் ஆங்காங்கு பம்பாய்முதலிய விடங்களில் ஜனங்களை மிகவும் வருத்துகின்றது. இவ்வுபத்திரவங்கள்யாவும் தீரும் வழியைச் சிந்தியுங்கள். நாமும் நம் முன்னோர்களைப்போல எப்பொழுதும் ஸ்நானம், ஆசமனம், சந்தியாவந்தனம், முதலிய சத்கருமங்களை நன்றாய் அனுஷ்டித்துவருவோமாயின் அப்பொழுதுதான் க்ஷேமமுண்டாகுமென நிச்சயமாய் நம்புங்கள். இங்ஙனம் செய்யவேண்டும்- இங்ஙனம் செய்யக் கூடாதெனஎல்லோரும் வார்த்தையிற்சொல்லிக்கொள்

[illegible] (௧)

[illegible] (௨)

[illegible] (௩)

[illegible] (௪)

[illegible] (௬)

[illegible]

வார்கள்- அதனுலொருகாரியமும்சித்திக்காது- அனுஷ்டித்தாலேயே பயன் பெறலாம். இடைவிடாது எவர்கள் ஜகதீசனிடத்து பக்திசெய்கிருர்களோ அவர்கட்குத்தான்பேரின்பத்தின்கண் மிகுந்தஆவலும்சிற்றின்பத்தின்கண் வெறுப்புமுண்டாகும்- சித்தமும் சுத்தமாகும்- வாக்கும் உண்மைப்பொருளேயோடும்- ஒருக்காலும் பொய்வார்த்தை யுரைக்கக்கூடாது- இக்குணங்களைப் பக்தியே விளைவிக்கும்- இப்படிப்பட்டபக்திமார்க்கம் வழங்கிவந்தால் உலகத்துக்கு க்ஷேம காரணமெனத் திடமாய் கினையுங்கள்- எல்லா உற்பாதங்களும் நசித்துவிடுமென உண்மையாகவே உரைக்கின்றேன்-

(1) ஜகத்தைக் காத்தருள வல்லமை பொருந்திய பகவான் சகல ஜனங்களுக்கும் சௌக்கியத்தையும் நல்ல பிழைப்பையும் ஆரோக்யத்தையும் தந்தருள வேண்டும். வேதங்களிலும் அதில் விதிக்கப்பட்டகன்மங்களிலும் ஈசனிடத்தும் பிராமணரிடத்தும் யாவருக்கும் பக்தியுண்டாகுக-

(2) மந்திரங்களின் வீரியமும் சத்தியம் தவம் நற்குணம் பிரசித்திபெற்ற வித்தை இவைகளும் வேதவிதிவழுவாது கன்மங்களனுஷ்டிக்கின்றவர்களின் கீர்த்தியும் எங்குமோங்கி வளர்ந்து மேன்மை பற்றியதாகவளங்குக-

(3) கலியின் விலாசத்தால் நேர்ந்த கேடுகளையெடுத்துக்கூறவும் முடியுமோ? ஹே பத்மநாப நீவிர் எப்பொழுதும் நிலேயாய் வசிக்குமிடம் யாது? ஹே கௌரீச தாம் வசிக்குமிடமெங்கே?

(4) அகஸ்தியர் முதலிய சிவபக்த சிரோமணிகளே! ப்ரஹ்லாத நாரதர்முதலிய விஷ்ணு பக்தர்களே! எங்கிருக்கின்றீர்கள்- இக்கலியின் கொடூரத்தை விலக்கி நல்வழியைக்காக்க முயலுங்கள்-

(5) கருணைக்கடலும் இடைவிடாது இலக்ஷ்மியை மார்பிலே தரிப்பவனுமாகிய செந்தாமரைக்கண்ணன் கல்யாணத்தை உண்டுபண்ணுவாராக வேண்டுகின்றனம்.

இன்னும்வரும்-

திருமலைசாஸ்திரி.